2019 ஜூலை 2]

அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் விடுதி இல்லை, கழிப்பிடம் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். துறை ரீதியாக ஆய்வு செய்து, தேவைப்படும்பட்சத்தில், அவை கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

கணினி பயிற்சிக் கல்லூரி

***35600—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மூலமாக கணினி பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் மீளா துயில்கொள்ளும் தங்கத்தாரகை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் கணினி பயிற்சிக் கல்லூரி துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல்வேறுவிதமான கல்லூரிகள் இருக்கின்றன. வேலை பார்க்கக்கூடிய மக்களுக்கு வேலையில்லாத சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்திலே படிக்கின்ற மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குகின்றீர்கள். தொழில்நுட்பத்திலே கோலோச்சியிருக்கின்ற நாடு நம்முடைய நாடு. தொழில்நுட்பத்தில் நம்முடைய நாடு தன்னிறைவு பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான கல்வியை கல்லூரி மூலமாக அதிகமாகக் கொடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதை இந்த சமூக மக்களும் விரும்புகிறார்கள். கணினிக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். என்னுடைய கோரிக்கை, என்னுடைய கேள்வி என்னவென்றால், கணினி பயிற்சிக் கல்லூரிக்கு பெரிய முதலீடு தேவையில்லை. தமிழகத்தில் அப்படிப்பட்ட கல்வியும் ஆரம்பிக்கப்படவில்லை. சிறிய கிராமத்தில்கூட இந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. Microsoft Office, Net working program, இப்படிப்பட்ட கல்வியை diploma course ஆக கிராம அளவில் உள்ள கல்லூரிகளில் வழங்கினால், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாகக் கிடைக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில், இப்படிப்பட்ட பயிற்சிக் கல்வியை படித்தால், தொழில் துறையில் சிறிய companies மற்றும் வியாபார நிலையங்களிலே நிச்சயமாக வேலைவாய்ப்பு அதிகமாக இருக்கும்; மக்களுக்கு நலமாக இருக்கும். எங்கள் மாவட்டத்தில், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட எந்தவிதமான தொழிற்சாலைகளோ, வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய எந்தவிதமான அமைப்புகளோ இல்லை; கல்லூரிகளும் இல்லை. 40 Engineering Colleges இருக்கின்றன. அதனால் எங்களுக்கு என்ன பயன் என்று கேட்கிறேன். படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் கொடுத்தேன். ஆகவே, நீங்கள் மறுபரிசீலனை செய்து, நிச்சயமாக இளைஞர்களுக்கு, ஏழைகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருகின்ற வகையிலே, கணினி பயிற்சிக் கல்லூரியைத் தந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை உங்களிடம் கேட்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 2]

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 32 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அவற்றில் கணினி அறிவியல்* (Computer Science) *பாடப் பிரிவைப் பயிற்றுவிக்கும் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 30 மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடப் பிரிவைப் பயிற்றுவிக்கும் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 8 ஆகும்.*

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 24 Polytechnic *கல்லூரிகள் உள்ளன. அவற்றில் கணினி பொறியியல்* (Computer Engineering) *பாடப் பிரிவைப் பயிற்றுவிக்கும்* Polytechnic *கல்லூரிகளின் எண்ணிக்கை 18 ஆகும். மேலும், அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், அந்தத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும்* ICT Academy *மூலம் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு வளர்ச்சித் திட்டம் போன்றவற்றின்கீழ் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

கன்னியாகுமரி மாவட்டத்தில் ICT Academy *மூலம் இதுவரை 1,139 கல்லூரி ஆசிரியர்களுக்கும், 5,681 கல்லூரி மாணவர்களுக்கும்* I.T. *தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கணினி சார்ந்த பொறியியல் கல்வியினை வழங்கும் இக்கல்லூரிகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கணினி சார்ந்த பொறியியல் கல்விக்கான தேவையினை நிறைவேற்றி வருகின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் கணினி பயிற்சிக் கல்லூரி துவங்க தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், தற்போது வேலைவாய்ப்பு இல்லையென்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நேரடியாக 6 இலட்சம் மாணவர்களுக்கும், மறைமுகமாக 9 இலட்சம் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பினை எங்கள் துறையின் சார்பாக தனியார் கம்பெனிகளிலும், நேரடியாகவும், அரசு துறைகளுடன் சேர்ந்தும் அவர்களை பணியில் அமர்த்தியிருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், தற்போது Zoho, HCL *கம்பெனிகள் மற்றும் திருநெல்வேலியில் இருக்கக்கூடிய* Atos Syntel I.T. Company *கூட வேலைவாய்ப்பு முகாமைத் துவங்கியிருக்கின்றன. கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலிக்குச்*

செல்வதற்கு 1½ மணி நேரம்தான் ஆகும். எனவே, தகுதியான படிப்பினை முடித்த மாணவர்கள் உங்கள் மாவட்டத்தில் இருந்தால், அவர்களுக்கு நாங்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவோம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

HCL, Zoho கம்பெனிகள் எல்லாம் பத்தாவது மற்றும் +2 dropout students இருந்தால், ஆண்டுக்கு 100 மாணவர்கள், 150 மாணவர்கள் வீதம் ஒவ்வொரு கம்பெனியிலும் எடுத்து, மாதச் சம்பளம் கொடுத்து, அதாவது stipend கொடுத்து, தங்குவதற்கு இடமும் கொடுத்து, training–ம் கொடுக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள மாணவர்களுக்கு training கொடுத்து, ஓராண்டு முடிந்த பின், I.T.–ல் பட்டப்படிப்பு முடித்த மாணவர்கள் எவ்வளவு திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்களோ அதே அளவிற்கு திறமை வாய்ந்தவர்களாக வெளியே வருகிறார்கள். இப்படி அவர்களுக்கு training–ம் கொடுத்து, வேலைவாய்ப்பினையும் வழங்கி வருகின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறதா? சரி கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் சில கருத்துகளைச் சொன்னீர்கள். எங்கள் மாவட்டத்தில் எந்தவொரு மையமும் இல்லை. எங்கள் மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா இருக்கிறதா? நீங்கள் நாங்குநேரிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அருகில் இருக்கும் கேரள மாநிலத்தில் உள்ள திருவனந்தபுரத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் தொழில்நுட்பப் பூங்காவில் பணி செய்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் அவர்களிடம் கெஞ்சி, அங்கு பணியில் சேரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் 92 விழுக்காட்டுக்கு அதிகமாக படித்த மாணவர்கள் இருக்கிறார்கள். அதிகமாக படித்தவர்கள் உள்ள மாவட்டமாக கன்னியாகுமரி மாவட்டம் இருக்கின்றது. நிறைய கல்லூரிகள் இருக்கின்றன. படித்த இளைஞர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான

2019 ஜூலை 2]

இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடக்கூடிய ஓர் அவல நிலை ஏற்படுகிறது. மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும், நான் உங்களை வேண்டுவது, எங்களுடைய மாவட்டத்தினுடைய நலனுக்காக, உங்களுடைய ஆட்சிக் காலத்தில், நான் ஏற்கெனவே உங்களிடம் கேட்டதுபோல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை ஆரம்பிக்க முயற்சிப்பீர்களா, நடவடிக்கை ஏதேனும் உண்டா? நீங்கள் மதுரையில் உள்ளது, சென்னையில் உள்ளது என்று தெரிவிக்கிறீர்கள். அதற்கு வாய்ப்பு இல்லை. எங்கள் மாவட்டத்திற்குக் கொடுக்க மாட்டீர்கள். நீங்கள் stipend *கொடுக்கிறீர்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். உங்களுடைய பரிந்துரைக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எங்களுடைய மாவட்டத்திற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதற்குத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நேரத்தைப் பாருங்கள். நான் கேள்வி நேரத்தை எப்போது முடிப்பது? உங்களை கேள்வி கேட்க அனுமதித்தால், பேசிக் கொண்டே போகிறீர்கள். (குறுக்கீடு) சரி கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *ஆகவே, நான் உங்களை வேண்டுவது, இந்த அவையில் கேட்க விரும்புவது, உங்களுடைய ஆட்சிக்காலத்தில் வேலைவாய்ப்பைக் கொடுக்கின்ற வகையில் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைத்துத் தாருங்கள் என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து அவருடைய மாவட்டத்திற்கு ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா வேண்டுமென்று கேட்டு வருகின்றார்கள். அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, இராமநாதபுரம், கடலூர் உள்ளிட்ட ஒரு சில மாவட்டங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த கம்பெனிகளை அங்கே தொடங்கினால் வருங்காலத்தில் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லப்படுமா என்று ஆய்வு செய்து பரிசோதித்ததில், அங்கே நடத்தப்பட்ட ஆய்வுக்கூறுகளின் முடிவுகள்* negative *ஆக இருக்கின்றன. தற்போது,*

துறை அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றால், அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

புதிய சொற்கள்

***45327—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மொழியில் புதிய சொற்கள் உருவாக்கும் பணி தொடர்கிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை உருவாக்கப்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் எத்தனை என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சொற் புதிது, சுவை புதிது, பொருள் புதிது என்பான் பாரதி. அந்த வழிநடந்து, தமிழால் வளர்ந்து வருபவர்கள் பலபேர் இருந்தாலும், தமிழை வளர்த்தெடுத்த புரட்சித் தலைவர் அவர்களுடைய வழிநின்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிநின்று ஆட்சி செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தமிழில் புது சொற்களை உருவாக்குவதற்காக சொற்குவை திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் அளித்துள்ளார்கள். அந்தச் செயல்பாட்டில் 7